**R 5397**

# "தனிமையான வழி"

## THE SOLITARY WAY

ஐயகோ, தனிமையில் ஒரு தனிப்பாதையிலே

நடந்து செல்வது எத்துணை கிருபை வாய்ந்தது என்று எத்தனை பேருக்குத் தெரியும்?

ஆம், தனிமை தான், அங்கிருக்கும் பெயர்சொல்லமுடியாத துன்பங்கள்

எத்தனை உள்ளது என்று வேறெந்த மானுட உள்ளமும் அறிந்திடாதே!

அழுகையிலே கழிக்கப்பட்ட இரவுகள்,

விடிந்தவுடன் சந்திக்கும் மக்களை பணிவான சிரித்த முகத்துடன் எதிர்கொள்வதும்,

உன்னுடைய ஏழ்மையான இருதயத்திடம் கிசுகிசுத்துக் கூறிக்கொள்! இன்னும் கொஞ்சம் மாத்திரம்
உன்னால் தாங்கிக்கொள்ள முடியுமா என்று!

தனிமை! ஏழ்மை இதயமே, மேலும் கேள்வி இது தான்!

ஏன்? இந்த வழியில் தான் நடந்திட வேண்டும் என்பது

மாறுபாடாய்த் தோன்றவில்லையா? ஆஹா? இல்லை!

உங்களுக்குத் தோன்றினாலும், நீ அவருடைய கால்தடங்களை பின்பற்றிச் சென்றிடு!

உனக்கு முன்பாக பயணம் செய்திட்ட பலபேர் அங்கே கூட்டமாகக் காணப்பட்டாலும்

அவருடன் பயணம்செய்ய யாரும் இல்லையே! தனிமையாய் உணர்கின்றாயா? ஆஹா! என் இருதயமே,

இனியும் அது தனிமையான வழி அல்லவே!

உன்னுடைய எஜமானனும் கர்த்தருமானவர் உன்னிடம் கூறவில்லையா?

"என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும் என்றே!

இனியும் அது தனிமையான வழி அல்லவே!

-------